20.03.2025

S.C.No. 312/2023

PW. 8 Tr. திரு. சுதன்

சாட்சி 1 வது எதிரியின் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (1 ஆம் எதிரி தரப்பில்) :-**

நாகர்கோவில் அல்லது ஆசாரிபள்ளத்தில் வைத்து வாக்குமூலம் எழுதப்பட்டதாக அந்த அ.சா.ஆ 1 வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றாலும் எனது பெயருக்கு கீழ் ஆரல்வாய்மொழி தான் என போடப்பட்டிருக்கிறது என்றாலும் சரிதான். எனது ஊர் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ. 1 என் கைப்பட எழுதப்பட்டது அல்ல என்றால் சரிதான். அ.சா.ஆ. 1 வாக்குமூலத்தை நான் எழுதவில்லை என்பதில் உறுதியாக இருக்கிறேனா என்றால் ஆமாம். நான் அழுது கொண்டிருந்தேன் அதனால் எழுத முடியவில்லை. நான் அழுது கொண்டிருந்ததால்தான் அ.சா.ஆ. 1 வாக்குமூலம் என்னால் எழுதப்படவில்லை என்று நீதிமன்றத்தில் தான் முதல் முறையாக சொல்கிறேன் என்றால் சரிதான். அ.சா.ஆ. 1 வாக்குமூலத்தை எனது அம்மா சொல்ல சொல்ல நான் எழுதியதாக அ.சா.ஆ. 1 ல் சொல்லியுள்ளது பொய் என்றால் அம்மா சொல்ல சொல்ல விஜய்தான் எழுதினார். நான் அதை படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன். விஜய் என்பவர் அ.சா.ஆ. 1 ஐ எழுதினார் என்ற விவரத்தையும் முதன் முதலில் நீதிமன்றத்தில்தான் சொல்கிறேன் என்றால் சரிதான்.

எனக்கு அ.சா.ஆ. 1 ஐ யார் எழுதியது யார் இந்த விவரங்களை சொன்னது போன்ற விவரங்கள் எனக்கு தொியமாலேயே அதில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய கையொப்பத்தையும், எனது அம்மா கையொப்பத்தையும் வெற்றுத் தாளில் வாங்கி விட்டு, அதற்கு பின்னர் அ.சா.ஆ. 1 தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ஆம் வகுப்பு படித்துவிட்டு, ஐ.டி.ஐ. வெல்டிங் படித்துள்ளேன். நான் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்யும் பழக்கம் உடையவன் என்றால் ஆங்கிலத்திலும் போடுவேன், தமிழிலும் போடுவேன். என்னிடம் காட்டப்படும் அழைப்பாணையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் எ.த.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நீதிமன்றத்தில் அளித்த சாட்சிய வாக்குமூலத்தில் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அ.சா.ஆ. 1 ல் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ. 1 வாக்குமூலமானது நானோ, எனது அம்மாவோ சொல்லி தயார் செய்யப்பட்டது அல்ல என்றாலும் எதிாிகளாக யார் யாரை சேர்க்க வேண்டும் என்று போலீசார் முடிவு செய்த பிறகு அவர்களால் எனது அம்மாவிடம் கையொப்பம் வாங்கி வைத்திருந்த வெற்றுத் தாளில் பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.